# மார்ச் - 11- சனி

தூய யுலோஜியுஸ்

மாசற்ற வழியில் நடப்போர் பேறுபெற்றோர்: ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.
திபா. 119:1

---

## முதல் வாசகம்: இணைச் சட்டம் 26 : 16 - 19

இந்த முறைமைகளையும் நியமங்களையும் நீ நிறைவேற்று மாறு உன் கடவுளாகிய ஆண்டவர் இன்று உனக்குக் கட்டளையிட்டுள்ளார். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அவற்றை நிறைவேற்றுவதில் கருத்தாயிரு. ஆண்டவரை உன் கடவுளாய் ஏற்பதாகவும் உனக்குக் கடவுளாக இருப்பார் என்றும், அவருடைய வழிகளில் நடப்பதாகவும், அவருடைய நியமங்களையும், கட்டளைகளையும் முறைமை களையும் கடைப்பிடிப்பதாகவும், அவர் குரலுக்குச் செவி கொடுப்பதாகவும் இன்று நீ அவருக்கு வாக்களித்துள்ளாய். நீ அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்தால், அவர் கூறியபடியே நீ அவருக்குச் சொந்தமான மக்களினமாய் இருப்பாய் என்றும், அவர் உருவாக்கிய எல்லா மக்களினங் களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும் உன்னையே உயர்த்துவார் என்றும், அதனால் உன் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினமாய் நீ இருப்பாய் என்றும் ஆண்டவர் இன்று உனக்கு வாக்களித்துள்ளார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்

## நற்செய்தி: மத்தேயு 5: 43 - 48

அந்நாட்களில் இயேசு கூறியதாவது: “உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்“ என்றார்.

**தியானம்:** இன்றைய வாசகங்கள் இரண்டும், இறைவனுக்கு உகந்த நேரிய வாழ்வை செவ்வனே வாழ எம்மை அழைக்கிறது. இறைவனின் அன்புக் கட்டளைகளையும் நியமங்களையும் முழுமனதுடன் நிறைவேற்றி அவர் மக்களாக வாழ நாம் அழைக்கப்படுகின்றோம். எமக்கு அன்பு செய்தவரை விட எம் பகைவரை அன்பு செய்யும்படி யேசு அழைக்கின்றார் . அடுத்திருப்பவர் என்ற சொல்லை, யூதர்கள் ஒரு குறுகிய கண்ணோட்டத்துடன் புரிந்து கொண்டனர். ஒரு யூதருக்கு இன்னொரு யூதர் மட்டும் தான் அடுத்திருப்பவர், அல்லது ஒரு பரிசேயருக்கு இன்னொரு பரிசேயர் தான் அடுத்திருப்பவர், ஏனையோர் பகைவராகவே கருதப்பட்டனர். ஆனால் மனித உறவுகளுக்கு ஒரு பரந்த நோக்கத்தை தருகின்றார் இயேசு.” யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற முது மொழியே இயேசுவின் கருத்தாகவும் இருக்கிறது. குறிப்பாக தேவையில் இருகின்ற எவரையும் நாம் அடுத்தவராகவும் நண்பராகவும் கருத வேண்டும் என்பது இயேசுவின் விருப்பம். இதை (லூக்கா 10: 25-36) மனித உறவுகளுக்கெல்லாம் அடிப்படை கடவுள், நம் அனைவருக்குமே ”தந்தை ” என்ற உணர்வே. அவரில் உலக மக்கள் அனைவரும் சகோதர சகோதரிகளே. ”விண்ணக தந்தையின் நிறைவு” என்று சொல்லுவது கடவுளுக்கே உரிய அளவற்ற நன்மைத்தனம், அன்பு, நீதி போன்ற குணங்களாகும். நமது வாழ்வின் குறிக்கோள் அத்தகைய ஒரு நிறைவை எட்டிப்பிடிப்பதாக இருக்க வேண்டும். அதாவது நம் வாழ்நாளெல்லாம் அன்பு, நீதி, போன்ற மனித நேய மதிப்பீடுகளை கடைபிடித்துக்கொண்டே இருக்க வேண்டும்.இவற்றை சிந்திப்போம் செயல்படுவோம்.